பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 01 ஞாயிற்றுக்கிழமை 15.05.2022 கதிர் 84

## தனியார் பஸ் சேவை முடங்கும் நிலையில்

டீசல் இன்மையால் நாடு முழுவதும் பஸ் சேவைகளை பத்து வீதமாகக் குறைக்க நேரிட்டுள்ளது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து டீசல் கிடைக்காவிடத்து நாளை முதல் தனியார் பஸ்கள் சேவையில் இருந்து விலக நேரிடும் என அந்தச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். ☞2

# நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு நாட்டில் தடை எதுவும் இல்லை!

### இறந்தவர்களின் ஆத்மாவை வைத்து எவரும் அரசியல் செய்யக்கூடாது என்கின்றார் ரணில்



**நாட்டில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எந்தத் தடையும் இல்லை. போரில் இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நினைவேந்த உறவுகளுக்கு முழு உரிமை உண்டு. அதை எவரும் தடுக்கவே முடியாது.**

**- இவ்வாறு புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

**நினைவேந்தல் நிகழ்வுகளில் இறந்தவர்களின் ஆத்மாவை வைத்து எவரும் அரசியல் செய்யக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.** ☞2


## சட்ட மறுசீரமைப்புக் குழுவின் தலைவராக சுமந்திரன் எம்.பி.



நாடாளுமன்றத்தின் கீழ் அமைக்கப்படும் சட்ட மறுசீரமைப்புக் குழுவுக்குத் தலைமை தாங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த கோரிக்கைக்கு தான் சம்மதம் தெரிவித்துள்ளார் எனதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். ☞2

## தீர்வுக்கான தகைமை ரணிலுக்கு உண்டாம்

### விக்கி கண்டுபிடிப்பு



நாட்டின் நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்கான தகைமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளது எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தனியார் வானொலி ஒன்றுக்குக் கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் தாமும் அவருக்கு ஆதரவு வழங்குதாக நாடாளுமன்ற உறுப்பினர் ☞2

## சபை முதல்வராக அமைச்சர் தினேஷ்

### ஆளும் கட்சி பிரதம கொறடாவாக பிரசன்ன



நாடாளுமன்றத்தில் சபை முதல்வராக அமைச்சர் தினேஷ் குணவர்தனவும், ஆளுந் தரப்பின் பிரதம கொறடாவாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர். ☞2

## எங்கள் கட்சியிலிருந்து எவரும் அரசுடன் இணையமாட்டார்கள்

### சஜித் நம்பிக்கையுடன் தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எவரும் அரசுடன் இணைந்துகொள்ள மாட்டார்கள் என்று அக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ☞2

## நாளையும் மின்வெட்டு இல்லை

இலங்கையில் நாளை திங்கட்கிழமையும் மின்சாரம் துண்டிக்கப்படமாட்டாது எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. ☞2

## நிதி அமைச்சு ரணில் வசம்!

நிதி அமைச்சும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமே ஒப்படைக்கப்படவுள்ளது.

பிரதம அமைச்சுக்கு மேலதிகமாக, நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும் அவர் செயற்படுவார்.

## சுசிலும் அநுரவும் ரணிலுக்கு ஆதரவு

### அமைச்சுப் பதவியும் தயார் நிலையில்



நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படப் போவதாக அறிவித்தவர்களில் இருவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர். அவர்களுக்கு அமைச்சுப் பதவியும் வழங்கப்படவுள்ளது. ☞2

## ரோஹினி கவிரத்னவுக்கு சுயாதீனக் கூட்டணி ஆதரவு



நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகருக்கான தேர்வின்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹினி கவிரத்னவை ஆதரிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட 11 கட்சிகளின் சுயாதீனக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றம் எதிர்வரும் 17ஆம் திகதி கூடும்போது, முதல் விடயமாக பிரதி சபாநாயகர் தேர்வு இடம்பெறும். ☞2

## இலங்கை மீண்டெழ ஒரு வருடம் எடுக்கும்

### பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவிப்பு



இலங்கை தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு சுமார் ஒரு வருட காலம் எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## முள்ளிவாய்க்கால் வரையிலான பேரணி பொத்துவிலில் இன்று காலை ஆரம்பம்




(க.கிருபாகரன்)

இனவிடுதலை வேண்டி பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையிலான மக்கள் பேரணி இன்று அம்பாறை மாவட்டம் பொத்துவில்லில் ஆரம்பமானது.

இப்பேரணியை வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். ☞2

### ஆரியகுளத்தில் வெசாக் கூடுகளை அமைக்க அனுமதிக்காது விட்டால்

## யாழ். மாநகர சபையைக் கலைக்க நேரும் என்று ஆளுநர் எச்சரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே.15

ஆரியகுளத்தின் உள்ளே வெசாக் கூடுகளை ☞2

## பொலிஸ்மா அதிபர் உடன் பதவி விலக வேண்டும்!

### ஜனாதிபதி முன்னிலையில் மொட்டு எம்.பிக்கள் வலியுறுத்து



மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்கத் தவறிய பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று ஜனாதிபதி ☞2

## இலங்கை மீண்டெழு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பல்கலைகழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கணேசமூர்த்தி இதனைத் தெரிவித்துள்ளார்.

தனியார் வானொலி ஒன்றில் ஒலிபரப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## ரோஹினி கவிரத்னவுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போதுரோஹினிகவிரத்னவை பிரதி சபாநாயகர் பதவிக்குப் பெயரிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியும், அந்தப் பதவிக்கு அஜித் ராஜபக்சவை களமிறக்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் முடிவெடுத்துள்ளன.

இந்நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரை ஆதரிப்பதற்கு 11 கட்சிகளின் சுயாதீனக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

## சுசிலும் அநுரவும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய சுசில் பிரேமஜயந்த கல்வி அமைச்சராகவும், அநுர பிரியதர்ஷன யாப்பா விவசாய அமைச்சராகவும் பதவியேற்கவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

## முள்ளிவாய்க்கால் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பேரணி பொத்துவில்லில் ஆரம்பமாகி, திருக்கோவில், அக்கரைப்பற்று, காரைதீவு, கல்முனை, களுவாஞ்சிகுடி, ஆரையம்பதி, காத்தான்குடியூடாக கல்லடிப் பாலத்தை வந்தடைந்தது.

அதனைத் தொடர்ந்து நாளைய தினம் மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து செங்கலடி, வாழைச்சேனை, வாகரையூடாகத் திருகோணமலை சிவன் கோவில் வளாகத்தைச் சென்றடையவுள்ளது.

17 ஆம் திகதி காலை திருகோணமலை சிவன் கோவில் வளாகத்திலிருந்து ஆரம்பமாகவுள்ள பேரணி வவுனியா ஊடாக முல்லைத்தீவைச் சென்றடையவுள்ளது.

இந்நிலையில் 18 ஆம் திகதி வடமாகாணத்திலிருந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் ஆரம்பிக்கப்பட்ட பேரணியுடன் இவர்கள் இணைந்து கொள்ளவுள்ளனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இப்பேரணியில் மதகுருமார்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

## பொலிஸ்மா அதிபர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையில், ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன், பொலிஸ்மா அதிபர் மீது சரமாரியாக விமர்சனக் கணைகளையும் தொடுத்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின்எம்.பிக்களுக்கும்இடையிலான சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்றது.

சுமார் 91 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர். மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. பிரதமர் பதவியை இராஜிநாமா செய்த மஹிந்த ராஜபக்ச கடந்த 10 ஆம் திகதி முதல் இன்றுவரை, பலத்த பாதுகாப்புக் மத்தியில் தலைமறைவாகவே வாழ்கின்றார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் நாட்டில் கடந்த 9 ஆம் திகதி ஏற்பட்ட வன்முறை, அதனால் ஏற்பட்ட தாக்கங்கள், புதிய அரசு, நாடாளுமன்ற அமர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது மக்கள் பிரதிநிதிகளைப் பாதுகாக்க, பொலிஸ்மா தவறிவிட்டார், முன்கூட்டியே பாதுகாப்பு பொறிமுறையை வகுக்கத் தவறிவிட்டார் என அவருக்கு எதிராக சரமாரியாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

## சபை முதல்வராக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆட்சியிலும் சபை முதல்வராக தினேஷ் குணவர்தனவே பதவி வகித்திருந்தார்.

மொட்டு கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன்போதே இவ்விரு நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

## எங்கள் கட்சியிலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சலுகைகளுக்காகவும், வரப் பிரசாதங்களுக்காகவும் தமது கட்சியையோ அல்லது தமது சுயமரியாதையைக் காட்டிக்கொடுக்கும் உறுப்பினர்கள் யாரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை. எவரும் அரசுடன் இணைந்துகொள்ளப் போவதில்லை.

சில ஊடகங்கள் பொய்யான வதந்திகளைப் பரப்பி, சர்வாதிகார அரசுக்கு ஒட்சிசனை வழங்க முயற்சிக்கின்றது.

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதே ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து உறுப்பினர்களின் நோக்கமாகும் - என்றார்.

## நாளையும் மின்வெட்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

## சட்ட மறுசீரமைப்புக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசியில் என்னைத் தொடர்புகொண்டு உரையாடினார்.

அரசுக்கு ஆதரவு வழங்குவீர்களா எனப் பிரதமர் கேள்வி எழுப்பினார். மக்கள் நலன்சார்ந்த மற்றும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரசு எடுக்கும் தீர்மானங்களுக்கு ஆதரவு வழங்குவதாக நான் பதிலளித்தேன் - என்றார்.

## தீர்வுக்கான தகைமை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, நிபந்தனைகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையில் பங்கேற்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

அதற்கமைய தங்களது கோரிக்கைகளுக்கான இணக்கத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எழுத்து மூலம் வழங்கினால் அமைச்சரவையில் பங்கேற்கலாம் எனவும் அவர் மேலும் கூறினார்.

## நினைவேந்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிக்கட்டப் போரில் இறந்தவர்களைநினைவுகூரும் 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்' வாரம் தற்போது தமிழர் தாயகமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்த நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாளான மே 18ஆம் திகதி உணர்வெழுச்சியுடன் நிகழ்வுகளை நடத்தவும் ஏற்பாட்டுக் குழுவினர் தயாராகி வருகின்றனர். எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, கடந்த இரு வருடங்கள் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதித்திருந்தது. தமிழர் தாயகத்தின் பல இடங்களில் நீதிமன்றங்கள் ஊடாகப் இந்தத் தடை உத்தரவுகளைப் பொலிஸார் பெற்றிருந்தனர்.

இவ்வாறான நிலையில் இம்முறையும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடங்கல் எதுவும் ஏற்படுமா என்று புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஊடகங்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

கடந்த நல்லாட்சியில் சகல நினைவேந்தல் நிகழ்வுகளையும் நடத்த நாம் அனுமதி வழங்கியிருந்தோம். அதேபோல் இனியும் நினைவேந்தல் நிகழ்வுகளுக்குத் தடை விதிக்க நாம் அனுமதிக்கமாட்டோம். தெற்குக்கு ஒரு நீதி, வடக்குக்கு ஒரு நீதி என்று இருக்கக்கூடாது. போரில் இறந்தவர்கள் அனைவரும் இலங்கையர்கள் என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும் - என்று ரணில் மேலும் தெரிவித்தார்.

## யாழ். மாநகர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்க அனுமதிக்காது விட்டா மாநகர சபையை உடன் கலைக்க வேண்டி நேரும் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அச்சுறுத்தல் விடுத்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ். நகரில் உள்ள இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மற்றும் விகாரைகளைச் சூழ வெசாக் கூடுகள் அமைக்கப்படுகின்றன.

இந்த நிலைமயில் யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாகவிகாரைக்கு முன்பாகவுள்ள ஆரியகுளத்தின் நடுவே வெசாக் கூடுகளை அமைக்க அனுமதிக்குமாறு படைத் தரப்பினால் இன்றைய தினம் வாய்மூலம் கோரிக்கை விடப்பட்டபோது குளப்பகுதி கூறுவிலைகோரல் மூலம் பராமரிப்பிற்காக தனியாரிடம் வழங்கப்பட்ட நிலைமயில் சபையினால் நேரடியாக அதனை வழங்க முடியாது எனப் பதிலளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தத் தகவலை ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா மாநகர சபையின் ஆணையாளர் த.ஜெயசீலனைத் தொடர்பு கொண்டு உடன் அனுமதி வழங்கப்பட வேண்டும் அல்லது மாநகர சபையைக் கலைக்க வேண்டிய நிலைமை வரும் எனத் மெரிவித்தார் என்று அறிய வந்தது.

## தனியார் பஸ் சேவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள காலப்பகுதியில் சகல பஸ்களும் வழமை போன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் சில நாட்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களுக்கு மாத்திரமே டீசல் கையிருப்பில் உள்ளது என அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## காலாவதியாகும் அவசரகால நிலை

நாடு இன்னும் நெருக்கடி நிலையில்தான் இருக்கின்றது. அரசியல், பொருளாதார நெருக்குவாரங்களை அடுத்து வெடித்த வன்முறையின் பதற்றப் பிடியிலிருந்து நாடு இன்னும் தன்னை முற்றாக விடுவித்துக் கொள்ளவில்லை. ஊரடங்கு உத்தரவுகள் தளர்த்தப்பட்டாலும் வழமை நிலை இன்னும் திரும்பவில்லை. உடனடியாகத் திரும்பும் சாத்தியமும் இல்லை.

தாங்கள் வாக்களித்துத் தெரிவு செய்த தங்களின் பிரதிநிதிகளின் வீடுகளையும் சொத்துக்களையும் மக்களே தேடித்தேடி எரித்த அராஜகமும், நடுநிலைப் பார்வையாளர்கள் கூட அதனைத் தடுத்து நிறுத்த வழியின்றி, வக்கின்றி, கையறுந்த நிலையில் பரிதவித்துப் பார்த்திருந்த கொடூரமும் கூட இன்னும் மறைந்து விடவில்லை.

இரண்டரை வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையும், இரண்டு வருடங்களுக்குள் பொதுத்தேர்தலில் மக்கள் வழங்கிய தீர்ப்பும் செயலிழந்து விட்டன என்று கருதும் நிலைமை.

இந்த நெருக்கடிச் சூழலில்தான் ஜனாதிபதி பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்திய அவசரகால நிலைமையும் அதையொட்டிய ஏற்படுத்திய விதிமுறைகளும் நாளையுடன் தானாகவே காலாவதியாகின்றன.

ஏற்கனவே இப்பகுதியில் நாம் சுட்டிக் காட்டியபடி, அவசரகால நிலைமையை ஜனாதிபதி பிரகடனப்படுத்தினால் அடுத்த பத்து நாள்களுக்குள் நாடாளுமன்றத்தைக் கூட்டி அதனை சபையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் அது – ஜனாதிபதியின் அந்த அறிவிப்பு – தானாகவே காலாவதியாகிவிடும். இனி நாடாளுமன்றம் கூடிய பின்னர், அது தொடர்பான ஒரு பிரேரணை விசேடமாக சமர்ப்பிக்கப்பட்டு, அது உரிய முறையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால்தான், அதற்குப் பிறகு அவசரகால நிலையை ஜனாதிபதி மீளவும் பிரகடனப்படுத்தி நடைமுறைக்குக் கொண்டு வரலாம். இல்லையேல் முன்னர் அறிவிக்கப்பட்ட அவசரகால நிலை செயலிழந்து ஒரு மாத காலத்திற்குப் பின்னர்தான் மீளப் பிறப்பிக்கும் அதிகாரம் அவருக்கு வரும்.

நாளை மறுதினம் நாடாளுமன்றமும் கூடுகின்றது. அதையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. தவிரவும், நாட்டின் நாலாபுறமும் இருந்து 225 எம்.பிக்கள் நாடாளுமன்றத்துக்கு வந்து, தமது செயற்பாடுகளை சுய இச்சையுடனும், சுயாதீனமாகவும், ஜனநாயக முறைப்படியும் ஆற்றிவிட்டுத் திரும்பிச்சென்று தத்தமது பிரதேசங்களில் இருந்து செயலாற்ற வேண்டும். இன்றைய வன்முறை நெருக்குவாரங்களுக்கு மத்தியில் இவற்றை முன்னெடுப்பதற்கான பாதுகாப்பு உரிய முறையில் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறான நெருக்கடி சமயத்தில் பாதுகாப்புத் தரப்புக்கு உதவும் அவசரகால நிலை என்ற அரண் நாளையுடன் – பொறுத்த கட்டத்தில் – இல்லாமல் போகின்றது.

அதையடுத்து, தமிழ் மக்களுக்கு எதிராக வரலாற்றுப் பேரவலமாக – வன்முறையின் ஊழிக் கூத்தாக – அரங்கேறிய முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 13ஆவது வருட நினைவேந்தல் புதன்கிழமை வருகின்றது.

அதனையும் அவசரகால நிலை என்ற கொடூரப் பிடியோடு இலங்கை அரசின் கூலிப்படைகள் அணுக முடியாத நிலைமையே உள்ளது.

ரணில் பிரதமராக இருந்த நல்லாட்சி அரசின் காலத்தில் இந்த நினைவேந்தலுக்குத் தடை இருக்கவில்லை. அந்தப் பேரவலத்தில் உயிரிழந்த தமது உறவுகளுக்கு மக்கள் ஒன்றுகூடி விளக்கேற்றி அஞ்சலிக்க வாய்ப்பிருந்தது.

அவசரகால நிலைமை இல்லாத சூழலில் ரணிலின் அரசு இம்முறை என்ன செய்யப் போகின்றது? மக்களின் நினைவேந்தல் உரிமை இம்முறையும் அடக்கப்படுமா? பார்ப்போம்.



## ஒருபோதும் காட்டிக்கொடுக்கவே மாட்டோம் போராட்டக்காரர்களிடம் சஜித் உத்தரவாதம்

நாட்டில் போராடிக் கொண்டிருக்கும் மக்கள்கோரும்சீர்திருத்தங்களுக்கு இணையான வேலைத்திட்டத்துக்காகவே நானும், ஐக்கிய மக்கள் சக்தியும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எனவே அந்த போராட்டம் ஒருபோதும் காட்டிக்கொடுக்கப்படமாட்டது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் ஒரு தரப்பினர் நேற்று சனிக்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து தமது கோரிக்கையை அவரிடம் சமர்ப்பித்தனர். இதன் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தனர்.

இதன் போது எதிர்க்கட்சித் தலைவர் மேலும் குறிப்பிடுகையில் –

போராட்ட களத்தின் கோரிக்கைகளை நாம் உணர்ந்து செயற்படுகின்றோம். அந்தக் கோரிக்கைகளுக்கு ஒருபோதும் துரோகமிழைக்க மாட்டோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை.

அதற்கு மேலதிகமாக குறிப்பிட்ட கால வரையறைக்குள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குதல், 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மீளக் கொணர்தல், அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்கான தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறையின் ஊடாக சட்டமன்றம், நிர்வாக மற்றும் நீதித்துறை அதிகாரங்களை நிறுவுதல் போன்ற ஜனநாயக செயற்பாடுகளுக்கான அர்ப்பணிப்பில் ஐக்கிய மக்கள் சக்தி மாற்றமின்றி உறுதியாக இருக்கும். –என்றார்.

## ‘நோ பையர் ஸோன்’ ஆவணப்படத்தைப் பார்வையிட சிங்கள மக்களை ஊக்குவிக்க இது சரியான தருணம்!

### அந்தப் படத்தின் இயக்குநர் கெலம் மக்ரே தெரிவிப்பு




பல்லின மக்களும் ராஜபக்ஷாக்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், தமிழ்மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் அடங்கிய ‘நோ பையர் ஸோன்’ என்ற ஆவணப்படத்தின் சிங்கள மொழிபெயர்ப்பை அனைவரையும் பார்க்கச்செய்யவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கும் அப்படத்தின் இயக்குநர் கெலம் மக்ரே, உண்மையே நீதிக்கான முதற்படி என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப்போரின்போது தமிழ்மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றக்காணொலிகளுடன் கூடியதாக கெலம் மக்ரேவினால் தயாரிக்கப்பட்ட ‘நோ பையர் ஸோன்’ என்ற ஆவணப்படம் 9 வருடங்களுக்கு முன்னர் ‘சனல் 4’ என்ற தொலைக்காட்சி சேவையில் வெளியாகி பாரிய அதிர்வலைகளைத் தோற்றுவித்திருந்தது.

தற்போது அந்த ஆவணப்படத்தை சிங்கள மக்களும் பார்வையிடவேண்டும் என்பதை வலியுறுத்தி அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் கூறியருப்பவை வருமாறு –

‘இலங்கையில் ராஜபக்ஷாக்களுக்கு எதிராக அனைத்துச் சமூகங்களும் கிளர்ந்தெழுந்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில், ‘நோ பையர் ஸோன்’ (யுத்த சூனியவலயம்) என்ற ஆவணப்படத்தின் சிங்கள மொழிபெயர்ப்பை அனைத்து மக்களையும் பார்க்கச்செய்வதற்கு ஊக்குவிப்பது வரவேற்கத்தக்கதாகும். அதனை இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ளமுடியும். உண்மை எதிர்காலத்துக்கு உதவும்’ என்று கெலம் மக்ரே அந்தப் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

அதனைத்தொடர்ந்து நேற்றைய தினம் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மற்றுமொரு பதிவைச் செய்திருக்கின்றார். ‘நோ பையர் ஸோன்’ ஆவணப்படத்தின் சிங்களமொழிபெயர்ப்பை முதன்முதலாகப் பார்வையிடுகின்ற பலர் டுவிட்டர் பதிவுகளை வெளியிட்டு வரு வதாக அப்பதிவில் சுட்டிக்காட்டியிருக்கும் அவர், ‘உண்மையே நீதிக்கான முதற்படி’ என்ற வசனத்துடன் அந்த ஆவணப்படத்தில் லிங்கைப் பதிவேற்றம் செய்திருக்கின்றார். அதனை அனைவருக்கும் பகிருமாறும் கேட்டுக்கொண்டிருக்கின்றார்.

## ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கல்கிசையில் கைது

கல்கிசையில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கல்கிசை குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக அத்திட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 20 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 34 வயதுடைய தெஹிவளைபிரதேசத்தைச்சேர்ந்தவராவார். கல்கிசை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பேரறிவாளன் வழக்கில் இரு தரப்பினாலும் நேற்று உச்ச நீதிமன்றத்தில் எழுத்துபூர்வ வாதங்கள் தாக்கல்



முன்னாள் பிரதமா ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன், தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை நிறுத்தி வைத்து தன்னை விடுதலை செய்யக்கோரி உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார். இந்த வழக்கில் இரு தினங்களுக்கு முன்னர் இறுதிக்கட்ட வாதங்கள் நடைபெற்றிருந்தன.

அப்போது அரசியலமைப்பில் இந்திய மத்திய அரசுக்கு உள்ள அதிகாரம் குறித்து உச்சநீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புகளை சுட்டிக்காட்டி மத்திய அரசு வாதிட்டது. மாநில அரசுகள் தங்களது அதிகார வரம்பிற்குள் வரும் விசாரணை அமைப்புகளின் வழக்குகளில் மட்டுமே முடிவெடுக்கலாம் என்றும், பேராறிவாளனின் வழக்கு மத்திய புலனாய்வு அமைப்பின் கீழ் வருவதால் மாநில அரசு முடிவெடுக்க முடியாது என்றும் மத்திய அரசினால் வாதிடப்பட்டது.

அதற்குப் பதிலளித்து, ஆளுநர் முடிவெடுக்க வேண்டிய விவகாரத்தில் குடியரசுத் தலைவரை தலையிட வைப்பது ஏன்? அமைச்சரவையின் முடிவுக்கு எதிராக ஆளுநர் செயல்பட்டிருப்பது உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது என தமிழக அரசு தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.

இந்த விசாரணையின்போது ஆளுநரின் அதிகாரம், மத்திய அரசின் அணுகுமுறை குறித்து நீதிபதிகள் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினர். மேலும், இந்த வழக்கில் மேற்கொண்டு ஏதேனும் வாதங்கள் இருந்தால் அவற்றை எழுத்துபூர்வமாகத் தாக்கல் செய்ய வேண்டும், எனவும் உத்தரவிட்டு, வழக்கின் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தனர்.

இதையடுத்து, பேரறிவாளன் மற்றும் மத்திய அரசின் சார்பில் நேற்று எழுத்துபூர்வமான வாதங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றமே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, தன்னை விடுதலை செய்ய வேண்டும் என பேரறிவாளன் தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார் எனசெய்திகள் தெரிவிக்கின்றன.

## காங்கிரஸ் ஆட்சியில் நாட்டின் வளர்ச்சி 10 ஆண்டுகள் முடங்கியதாக இந்தியப் பிரதமர் மோடி குற்றச்சாட்டு




மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரில் நடைபெற்ற புதிய தொழில் முயலுநர்களுக்கான மாநாட்டில், மாநில அரசின் புதிய தொழில் முயற்சிக் கொள்கையை காணொலி மூலம் அறிமுகப்படுத்தி வைத்து இந்தியப் பிரதமர் மோடி உரையாற்றியிருந்தார். அப்போது, மன்மோகன்சிங் தலைமையிலான முந்தைய காங்கிரஸ் ஆட்சியின் செயல்பாடுகளை அவர் கடுமையாகச் சாடியிருந்தார்.

சொந்த பந்தம், கொள்கை முடக்கம் மற்றும் மோசடிகளால் கடந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 10 ஆண்டுகள் நாட்டின் வளர்ச்சி முடங்கியதாக பிரதமர் சூசகமாகக் குறிப்பிட்டார். முந்தைய காங்கிரஸ் அரசிடம் தெளிவான கொள்கைகள் இல்லாததால் தொழில் தொடங்குவதில் புதுமையான ஆர்வத்துடன் இருந்த இளைஞர்கள் குழப்பத்தில் ஆழ்ந்தனர் என அவர் கூறினார். இதனால் ஒரு தலைமுறையின் கனவுகளை முந்தைய காங்கிரஸ் அரசு அழித்துவிட்டது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

2014ஆம் ஆண்டில் நாட்டில் 300 முதல் 400வரை ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மட்டுமே இருந்ததாகவும், 2014 ஆம் ஆண்டிற்கு பிறகு இந்திய இளைஞர்களிடையே புதுமையான உணர்வுக்கு தமது அரசு புத்துயிர் அளித்தது என்றும் அவர் கூறினார். யோசனை, புதுமை மற்றும் தொழில் ஆகியவற்றில் மத்திய அரசு கவனம் செலுத்தியது என்றும், முதலில், உள்கட்டமைப்பில் முதலீடு செய்யப்பட்டது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியாவில் 70,000 அங்கீகரிக்கப்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். இளைஞர்களின் ஆற்றலால் நாட்டின் வளர்ச்சி புதிய வேகத்தைப் பெற்றுள்ளதாகவும் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா இருக்கின்றனர் எனவும் பிரதமர் மோடி தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.




## 1.7 கோடி ரூபா மதிப்புள்ள தங்கம் கடத்தல் சென்னை விமான நிலையத்தில் இருவர் கைது

சுங்கத்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், கொழும்பிலிருந்து சென்னை வந்த பயணிகள் விமானத்தில் சோதனையில் ஈடுபட்டபோது, இரண்டு பயணிகளின் பைகளில் இறப்பர் போன்ற பசைக்குள் தங்கத்தை மறைத்துக் கடத்தி வந்தமை தெரியவந்துள்ளதாக, சென்னை சர்வதேச விமான நிலையச் சுங்கத்துறையின் முதன்மை ஆணையர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சென்னை மண்ணடியைச் சேர்ந்த தமீம் அன்சாரி, முத்தியால் பேட்டையைச் சேர்ந்த சஜிதா யாஸ்மின் ஆகியோரிடமிருந்து 72.63 லட்சம் ரூபா மதிப்புள்ள 1.596 கிலோ கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டு, இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்றொரு சம்பவத்தில் சென்னை சர்வதேச விமான நிலையப்பயணிகள்அறையின் கழிப்பறையில் உரிமை கோரப்படாத பொலித்தீன் பையிலிருந்து 97.57 லட்சம் ரூபாமதிப்புள்ள 2.12கிலோகிராம் எடையுள்ள தங்கம் கண் டெடுக்கப்பட்டுகைப்பற்றப்பட்டதாகவும் அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பெண்களுக்கு எதிரான அதிக கொடுமைகள் கர்நாடகாவில் இந்திய குடும்ப நலத்துறை ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

இந்திய கலாசாரப்படி பல சம்பிரதாயங்களுடன் நடக்கும் திருமணங்களிலும் வரதட்சணைப் பிரச்சினை, குடும்பத்தினரின் கொடுமை, கணவர் கொடுமை இப்படி பல பிரச்சினைகளால் திருமண பந்தங்கள் முறிந்து போகின்றன.

இதில் அதிக அளவில் பாதிக்கப்படுவது பெண்கள் தான். அதில் இருந்து ஒருசில பெண்கள் விடுதலை பெற்று தமக்கான புதிய வாழ்க்கையை அமைத்துக்கொள்கின்றனர். ஆனால், ஏராளமான பெண்கள் தங்களுக்கு கிடைத்தது அவ்வளவுதான் என்று சகித்துக் கொண்டும் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டும் வாழ்ந்து வருகிறார்கள், என்று பல்வேறு அமைப்புகளாலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் தரவுகள் தெரிவிக்கின்றன.

பெண்களுக்கு அதிக கொடுமைகள், தொல்லைகள் கொடுப்பது பற்றி இந்திய தேசிய குடும்ப நலத்துறை ஆய்வு ஒன்றினை நடத்தியிருந்தது. இந்த ஆய்வில் இந்திய அளவில் பெண்களுக்கு அதிக கொடுமைகள், தொல்லைகள் கொடுப்பதில் கர்நாடக மாநிலம் முதலிடத்தை பிடித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த ஆய்வின்போது கிடைத்த தரவுகளில், கர்நாடகா 48 சதவீதமும், பீகார் 43 சதவீதமுமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடக்கும் மாநிலங்களில் முதலிரு இடங்களையும் பெற்றிருக்கின்றன.

இந்த ஆய்வுக்கு பிறகு எந்தெந்த வகைகளில் பெண்களுக்கு கொடுமைகள் இழைக்கப்படுகின்றன என்பது குறித்தும் தேசிய குடும்ப நலத்துறை ஒரு தகவலை வெளியிட்டுள்ளது.

மனதளவிலும், உடல் அளவிலும், பாலியல் ரீதியிலும் அதிக தொல்லைகள் மற்றும் கொடுமைகள் கொடுப்பது கணவர்கள்தான் என்றும், சில கணவர்கள் வெளியுலகிற்கு நல்லவர்களாக இருந்தாலும் மனைவிகளிடம் மட்டும் கொடுமையாளர்களாக நடந்து வன்முறையைப் பிரயோகிப்பதும் உண்டு என்று கூறப்படுகிறது. மேலும், பெண்களின் நடத்தை மீது சந்தேகம் அடைந்தும், அவர்களை கடுமையாக விமர்சித்தும் தொல்லைகள் கொடுக்கப் படுகின்றன எனவும் அறியப்பட்டுள்ளது.

குடும்ப சண்டையை காரணம் காட்டி பெண்கள் தாக்கப்படுவதும் அதிகரித்துள்ளது. இதில் காயம் அடையும் பெண்களை கணவரோ, அவரது குடும்பத்தினரோ காப்பாற்ற முன் வருவதும் இல்லை என்றும் தெரிகிறது. இதில் கணவன்மார் தங்களது மனைவிகளை கண் உள்ளடங்கிய தலைப் பகுதியில் தாக்குவதும் கை, கால்களை முறிப்பதும், கொடூரமாகத் தாக்குவதும் அதிகரித்துள்ளதாகவும், பெண்கள் மீது தீவைக்கும் சம்பவங்களும் கணிசமாக உயர்ந்துள்ளன எனவும் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், பெரும்பாலான பெண்கள் இத்தகைய பிரச்சினைகளைச் சகித்துக் கொண்டும், சமூகத்தை மனதில் வைத்து தங்களுக்கான பிரச்சினைகளை வெளியேசொல்வதுமில்லைஎன்றும்தெரியவந்துள்ளது.



58சதவீதமானபெண்கள்பிரச்சினைகளைசகித்துக்கொள்ள முடியாமல் தங்கள் பெற்றோர் வீடுகளுக்கு சென்று விடுகின்றனர் எனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

அத்தோடு, 27 சதவீதமான பெண்கள் தங்கள் பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் பிரச்சினைகளைத் தெரிவித்துத் தீர்வு காண்பதும், 9 சதவீதப் பெண்கள் சமூக அமைப்புகளின் உதவியை நாடுவதும், 2 சதவீத பெண்கள் தாங்களே தங்கள் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முயல்வதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. ஒரு சதவீதத்திற்கும் குறைவான பெண்களே காவல் துறையும், நீதிமன்றங்களையும் நாடுவதும் குறித்த ஆய்வில் தெரியவந்திருக்கிறது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு


# உறவுகளை ஒன்றிணைக்கும் ஓர் ஆல மரம் குடும்பம்



**இன்று சர்வதேச குடும்ப தினம்**

மனித சமூகத்தின் மிக தொன்மையான சமூக நிறுவனமாகக் காணப்படுவது குடும்பமாகும். இது அனைத்து சமூகங்களிலும் காணப்படும் இன்றியமையாத சமூக நிறுவனமாக விளங்குகின்றது. ஓர் ஆணும், பெண்ணும் பிள்ளைகளுடனோ அல்லது பிள்ளைகள் இல்லாமலோ அல்லது திருமணபந்தத்தால் இணைக்கப்பட்டு இரத்த உறவினாலும் அல்லது தத்தெடுக்கும் உறவுகளினாலும் இணைக்கப்படுகின்ற நிறுவனம் எனக் கூறலாம். வேறுவகையில் கூறினால், பாலுணர்ச்சியால் நிலைத்து நிற்கக் கூடியதும், இனப்பெருக்கத்தின் மூலமாக குழந்தை வளர்க்கும் தன்மை வாய்ந்தது மான குழுவே குடும்பமாகும். ஒரு மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை எவ்வாறு தனது வாழ்க்கையை வாழவேண்டும் என்பதை கற்றுக் கொடுக்கின்ற அடிப்படை அலகாக குடும்பம் திகழ்கின்றது என்றால் அது மிகையாகாது.

நவீனமயமான இந்த யுகத்தில் தொழில் நிமித்தமாகவும், கல்வி நிமித்தமாகவும் அலைந்து திரிகின்ற அனைவரையும் ஒரு நாளில் சந்திக்க வைத்து, மனம் விட்டு பேச வைக்கும் ஒரு நாள்தான் உலக குடும்ப தினம். அதுதான் இன்று உலக குடும்பதினமாக கொண்டாடப்பட்டுவருகின்றது. 1993 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் இது கொண்டாடப்பட்டு வருகின்றது.

,பிரிந்து கிடக்கும் குடும்பங்களை ஒரு நாளாவது ஒன்று சேர்த்து, கூடி, பேசி, சந்தோசமாக வைத்திருக்கும் எண்ணத்தினை மையமாகக் கொண்டே இது ஆரம்பமாகியது.

ஒரு குடும்பம் பல்வேறுபட்ட பணிகளினை ஆற்றுகின்றது. அது, சமூகமயமாதலை ஏற்படுத்துகின்ற ஆரம்ப – அடிப்படை – அலகாக உள்ளது.

பிறக்கும் ஒவ்வொரு குழந்தையினதும் ஆளுமையை வளர்ப்பதற்கான பயிற்சியையும், வழிகாட்டுதல்களையும் சமூகமே அக்கறையுடன் பெற்றுக் கொடுக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்வதே சமூகமயமாக்கல். சமூக நிறுவனங்களான பாடசாலை, ஆசிரியர், ஊடகம், அரசியல், சமவயதுக் குழுக்கள், உறவினர்கள் போன்ற பல நிறுவனங்கள் காணப்பட்டாலும், அவற்றில் மிக முக்கியமான சமூகமயமாக்கல் நிறுவனமாகக் காணப்படுவது குடும்பம்.

மதத்தை குடும்பமே கற்றுக் கொடுக்கின்றது. சிறுவயதில் இருந்து, ஒரு பிள்ளை வளர்ந்து வரும்வரை, அந்த பிள்ளைக்கு தனது மதம் எது, மதத்தினுடைய நடைமுறைகள் என்ன, நம்பிக்கை, சடங்குகள், சம்பிரதாயங்கள், இறைபக்தி, மரபுகள், வழக்காறுகள், மதம் கூறுகின்ற கருத்துக்கள் போன்ற பல கருத்துக்களை குடும்பமே ஒரு பிள்ளைக்கு கற்றுக் கொடுக்கின்றது. இவ்வாறு ஒரு பிள்ளைக்கு தனது கலாசாரம், பண்பாடு, பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுக்கின்ற பணியினை குடும்பம் ஆற்றுகின்றது.

பொருளாதார மேம்பாட்டு செயற்பாடுகளைக் குடும்பமே கற்றுக் கொடுக்கின்றது. நாம் வாழுகின்ற இக் காலத்தில் பொருளாதாரம் எந்தளவிற்கு முக்கியமானது என்பதனை தனது பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கின்ற பாரிய பணியினைக் குடும்பம் செய்கின்றது. பணத்தினை எவ்வாறு சிக்கனமாக பயன்படுத்த வேண்டும், சேமிப்பு பழக்கத்தினை எவ்வாறு கடைப்பிடிப்பது, கிடைக்கின்ற வருமானத்தினை மையமாகக் கொண்டு எவ்வாறு வாழ்க்கையில் முன்னேறலாம்என்பதுபோன்றபலவிடயங்களினை கற்றுக் கொடுக்கின்ற பாரிய பணியினை குடும்பமே செய்கின்றது.

ஒரு குழந்தை வளர்ந்து பெரியவனாகும் வரை அந்த பிள்ளையினுடைய பாதுகாப்பில் அதிக கரிசனை செலுத்துகின்ற பணியினையும் குடும்பமே ஆற்றுகின்றது. அது மட்டுமல்லாமல், கல்வி புகட்டுதல், தலைமைத்துவ பயிற்சியை வழங்குதல், உளவியல் ரீதியான மனநிம்மதியை வழங்குதல், சந்ததி பெருக்கத்தினை மேற்கொள்ளல், சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தல், கூட்டொருமைப்பாட்டின் முக்கியத்துவத்தினை எடுத்துக்கூறல் போன்ற பல்வேறுபட்ட பணிகளினை மேற்கொள்ளும் ஓர் சமூக நிறுவனமாக குடும்பமே திகழ்கின்றது என்றால் இது மிகையாகாது.



இன்றைய காலகட்டத்தில் பல குடும்பங்கள் தாம் ஆற்றுகின்ற பணிகளினை மறந்து செயற்படுவதனை எம்மால் காணலாம். நகரக் குடும்பங் களில் சமூகமயமாதல் செயற்பாட்டிற்குப் பதிலாக ஊடகங்கள், ஹோட்டல்கள், பஸ்தரிப்பு நிலையங்கள், சம வயது குழுக்கள் போன்றவற்றின் ஊடாக பிள்ளைகள் தாமாகவே சமூகமயப்படுத்தப்படுகின்ற சூழ் நிலையினை நாம் அவதானிக் கலாம். அதேபோன்று பெருநாள்கள், விசேட தினங்கள், போன்றவற்றில் மட்டும் மதச்சடங்குகள், கிரியைகள் நிறைவேற்றப்படுகின்றன.



அன்பு, பாசம், பரிவு, போன்றவை தற்காலத்தில் அருகிக் கொண்டு வருவதனையும் நாம் பல குடும்பங்களில் காணமுடிகின்றது. சில குடும்பங்கள் பிள்ளைகளையும், முதியவர்களையும் சுமையாக நினைத்து பராமரிப்பு நிலையங்களில் கொண்டு சேர்ப்பதனையும் நாம் காணமுடிவது கவலை தருகின்றது. பிள்ளைகள் பெற்றெடுப்பதை விரும்பாத பல குடும்பங்களும் தற்கால உலகிலுள்ளன.

இன்னும் சில குடும்பங்களினை எடுத்துப்பார்க்கும் போது பிள்ளைகளுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய பெற்றோர்களே பிள்ளைகளை பிற மனிதர்களைப்போல் நடத்துவதனை பார்க்கலாம். பெண்களுக்கெதிரான வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வந்துள்ளமையினை அன்றாடம் நாம் காண்கின்ற நிகழ்வுகளின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. தந்தையே பிள்ளைகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துகின்ற மிக மோசமான, கீழ்த்தனமான நிலைகளினையும் காணமுடிவது வேதனையளிக்கின்றது.

தற்காலத்தில் அனேகமான குடும்பங்களில் கட்டுப்பாடுகளுக்குப் பதிலாக எல்லையற்ற சுதந்திரத்தினை வழங்குவதனை காணலாம். இதனால் பிள்ளைகள் சிறு வயதிலே வழி தவறி செல்வதற்கான வாய்ப்புக்களை குடும்பமே ஏற்படுத்திக் கொடுக்கின்றது. பிள்ளைகளின் விருப்பங்களையும், நலனையும், ஆசைகளையும் நிறைவேற்றிக் கொடுக்கின்றோம் என்ற பெயரில் குடும்பமே தமது பிள்ளைகள் வழி தவறிப்போவதற்கு காரணமாய் அமைகின்றது.

இவ்வாறு தற்காலத்தில் குடும்பங்கள் தங்களினுடைய பணிகளை மறந்து செயற்படுவதனை எம்மால் காணமுடிகின்றது. இதற்கான காரணங்கள் பல. அந்தவகையில் கைத்தொழில் மயமாதல், நகரமயமாதல், உலகமாயமாதல், மேற்குலகுமயமாதல், மதச்சார்பின்மை, ஊடகத் துறையின் வேகமான வளர்ச்சி, நவீனத்துவ சிந்தனைகள், அதிகரித்த வேலை போன்ற பல காரணங்களினை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். ஆரம்ப காலத்தில் காணப்பட்ட குடும்பங்களிற்கும், இன்று காணப்படுகின்ற குடும்பங்களிற்கும் நிறைய வித்தியாசம் காணப்படுகின்றது. கூட்டுக் குடும்ப முறையிலுருந்து தற்போது தனிக் குடும்ப முறைக்கு சமூகம் மாறியுள்ளதனை காணலாம். தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, பெரியம்மா, பெரியப்பா, சித்தி, சித்தப்பா, மாமா, மாமி எனக் கூட்டுக் குடும்பமாகக் காணப்பட்ட நிலைமாறி, இன்று கணவன், மனைவி ஒரு பிள்ளை என்ற நிலையில் பிரிந்து சென்று தனிக்குடும்ப முறைக்கு பழக்கப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

சமூக நிறுவனத்தில் அடிப்படையான நிறுவனமாக விளங்கும் குடும்பம் என்ற அலகு, தான் நிறைவேற்ற வேண்டிய பணிகளையும், கடமைகளையும் மறந்து செயற்படுவதனை எம்மால் காணமுடிகின்றது. குடும்பத்தில் எங்கு பார்த்தாலும் பிரச்சினை, விவாகரத்து, குடும்பத்தை விட்டு பிரிந்து போகும் நிலைதான் காணப்படுகின்றது. அழகான குருவிக் கூட்டினுடைய மகிமை தெரியாத நபர்களின் மூலமே இந்நிலைமை தோன்றுகின்றது. குடும்பம் என்பது மிக முக்கியமான ஒரு நிறுவனம் என்பதை மறந்து, தற்காலத்தில் பல மனிதர்கள் செயற்படுவதனை நாம் காணலாம். ஆகவே குடும்பம் என்பது ஒரு மனிதனுள் பின்னிப்பிணைந்தது. ஒரு மனிதனுக்கு மிக முக்கியம் குடும்பமாகும். தனது மகிழ்ச்சியினையும், துக்கத்தினையும் பகிர்ந்து கொள்ள நெஞ்சுக்கு நெருக்கமான ஆள் ஒன்று தேவை என்று கூறுவார்கள். ஆனால் அந்த ஆள்தான் குடும்பம் என்பதை பலர் மறந்து விடுகின்றார்கள்.

எனவே உறவுகளை ஒன்றிணைக்கின்ற ஓர் ஆலமரமான குடும்பத்தினுடைய மகிமையை நாம் யாவரும் புரிந்து கொள்ள வேண்டும். குடும்பத்தை அன்பின் ஆலயம் என்று கூறுவார்கள். ஓர் நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் எனவும் அழைப்பர். ஆகவே குடும்பத்திற்குள் எந்தவிதமான விரிசல்களும் இல்லாமல் நடந்து கொள்வது ஒவ்வொருவரினதும் மிக முக்கிய கடமையாகும். உறவுகளுக்குள்ளே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருந்தாலே குடும்பத்திற்குள் விரிசல் ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளலாம். குடும்ப தினமான இன்று குடும்பத்திலுள்ள பெற்றோர்கள் பிள்ளைகளினுடைய தேவைகளையும், பிள்ளைகள் பெற்றோர்களின் விருப்பங்களையும் அறிந்து கொண்டு அவற்றினை நிறைவேற்றிக் கொள்வது மிக அவசியமாகும். ஆகவே குடும்பத்தினுடைய அவசியத்தினையும், பணிகளையும், பொறுப்புக்களையும் விளங்கிக் கொண்டு நாம் வாழுகின்ற சமூகத்தில் அனைவராலும் மதித்துப் போற்றக் கூடிய குடும்பமாக விளங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது எம் அனைவரினதும் கடமையாகும்.

– பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன் –
(சமூகவியல் மற்றும் மானிடவியல் சிறப்புக் கற்கை, கிழக்குப் பல்கலைக்கழகம்)

# மட்டு. முள்ளிவாய்க்கால் நிகழ்வில் புலனாய்வாளர் கலைக்கப்பட்டார்








மட்டக்களப்பில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் கஞ்சியை நினைவுகூரும் நிகழ்வைப் படமெடுத்த புலனாய்வாளர் துரத்தியடிக்கப்பட்டார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் மூன்றாம் நாளை நினைவுகூரும் முகமாக 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' வழங்கல் நிகழ்வொன்று நேற்று மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலை நினைவுத்தூபி முன்பாக இடம்பெற்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' காய்ச்சப்பட்டு வீதியால் சென்ற மக்களுக்கு வழங்கப்பட்டது. அது தொடர்பான துண்டுப் பிரசுரமும் வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது மதகுருமாருக்கு முதலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, வீதியால் பயணித்த மக்களுக்கும் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது அருட்தந்தையர்களான அருட்பணி ஜோன் ஜோசப்மேரி, அருட்பணி கே.ஜெகதாஸ், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் ஏற்பாட்டாளர் குருசுமுத்து லவகுமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது இந்த நிகழ்வைப் படம் எடுத்த புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் நிகழ்வின் ஏற்பாட்டாளர்களினால் துரத்தியடிக்கப்பட்டார்.

## திருமலைக் கடலில் மிதந்த லிங்கநகர் வாசியின் சடலம்

திருகோணமலை லிங்க நகர் கடற்பகுதியில் கடலில் மிதந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடல் பரப்பில் இன்று மீன்பிடிப்பதற்காக கடலுக்கு சென்ற மீனவர்கள் குறித்த சடலம் மிதப்பதை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் மற்றும் மீனவர்கள் இணைந்து குறித்த சடலத்தை கரைக்குக் கொண்டு வந்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் திருகோணமலை லிங்க நகர் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட சண்முகநாதன் கருணாகரன் (வயது 49) எனத் தெரிய வருகிறது. சடலத்தை திருகோணமலை மாவட்ட பதில் நீதிவான் தர்ஷினி அன்னதுரை முன்னிலையில் குடும்பத்தினர் அடையாளப்படுத்தினர்.

மேலும் சடலமத்தை பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறும் இதன்போது நீதிவான் கட்டளையிட்டார்.

இந்த மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மயிலம்பாவெளிய விபத்தில் இளம் குடும்பஸ்தர் மரணம்

(க.கிருபாகரன்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தன்னாமுனைப் பிரதேசத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் சிவாகரன் (வயது- 40) என்ற இளம் குடும்பஸ்தரொருவர் மயிலம்பாவெளியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.



இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

இந்த இளைஞன் மயிலம்பாவெளி காமாட்சியம்மன் ஆலய வீதியூடாக தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கையில், மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து, வீதியோரத்திலுள்ள முட்கம்பிகளில் மோதியதில் அதில் சிக்குண்டு அக்குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்பது பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

ஏறாவூர் நீதிவானின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற ஏறாவூர்ப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எச்.எம். ஹக்கீம் சடலத்தைப் பார்வையிட்டு, அதனை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் பொருட்டு மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர்ப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## களுவாஞ்சிகுடியில் வீடொன்றிலிருந்து பெருமளவு மதுபானப் போத்தல்கள் மீட்பு

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவில் சனிக்கிழமை இரவு பெரியகல்லாறு கிராமத்தில் உள்ள வீடு ஒன்றிலிருந்து பெருந்தொகையாக சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்த மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை, மற்றும் திங்கட்கிழமை விடுமுறை தினங்களாக உள்ளமையால் இதனை முன்னிட்டு அதிக விலைக்கு சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்கே இவ்வாறு பெருந்தொகையான மதுபானங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் ஆறு லட்சம் ரூபா பெறுமதி மதிக்கத்தக்க மதுசாரம் மற்றும் பியர் போத்தல்கள் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன.

வீட்டில் மதுபான போத்தல்களைப் பதுக்கி வைத்திருந்த சந்தேகத்தின் பேரில் சிலரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.







# இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர் இறுதியில் ஜோகோவிச் – சிட்சிபாஸ்

இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் இன்று செர்பியாவின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச் கிரேக்கத்தின் சிட்சிபாஸை எதிர்கொள்கிறார். காலிறுதிப் போட்டியில் நோவக் ஜோகோவிச், போராடி வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியிருந்தார். அந்தப் போட்டியில் கனடாவின் பெலிக்ஸ் ஆகர் அலியாசிமை எதிர்கொண்ட அவர், முதல் செட்டை 7-5 என போராடிக் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில், ஜோகோவிச்சுக்கு பெலிக்ஸ் ஆகர் அலியாசிம் கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால் செட் டை பிரேக் வரை நீண்டது.

இதில் தனது அனுபவத்தைக் கொண்டு பெலிக்ஸ் ஆகர் அலியாசிமை சிறப்பாக கையாண்ட நோவக் ஜோகோவிச், செட்டை 7(7)-5(1) என கைப்பற்றி அரையிறுதிக்கு முன்னேறினார். அரையிறுதிப்போட்டியில், நோவக் ஜோகோவிச், நோர்வேயின் கஸ்பர் ரூட்டை எதிர்கொண்டார். இந்தப் போட்டியில் அவர் 6-4, 6-3 எனும் நேர் செட்களில் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தார்.

அதேவேளை, கிரேக்கத்தின் சிட்சிபாஸ் தனது அரையிறுதிப் போட்டியில் ஜேர்மனியின் ஸ்வரேவை எதிர்த்தாடியிருந்தார். நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் முதல் செட்டை 4-6 என இழந்த சிட்சிபாஸ், சுதாரித்துக் கொண்டு அடுத்த இரு செட்களையும் 6-3, 6-3 எனக் கைப்பற்றி, இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றார்.

## சன்ரைசர்ஸ் அணியை வீழ்த்தியது கொல்கத்தா அடுத்த சுற்றுக்கான வாய்ப்பைத் தக்கவைத்தது



ஐ.பி.எல். தொடரில், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியுடனான நேற்றைய போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 54 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ், 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது. அன்ட்ரே ரசல் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 28 பந்துகளில் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களை எடுத்தார். சன்ரைசர்ஸ் அணியின் உம்ரன் மலிக் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர், 178 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்தது 123 ஓட்டங்களை மாத்திரமே பெற, 54 ஓட்டங்களால் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி பிளே ஓவ் எசுற்றுக்கான வாய்ப்பை தொடர்ந்தும் தக்கவைத்துள்ளது. சன்ரைசர்ஸ் அணியின் அபிசேக் சர்மா 43 ஓட்டங்களை எடுத்தார். கொல்கத்தா அணி வீரர் ரசல் பந்து வீச்சிலும் அசத்தி, 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருதும் அவருக்கே கிடைத்தது.

## ஆஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் சைமண்ட்ஸ் கார் விபத்தில் உயிரிழப்பு



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஆண்ட்ரூ சைமண்ட்ஸ் டவுன்வில்லி பகுதிக்கு வெளியே நேற்றிரவு ஏற்பட்ட கார் விபத்தில் உயிரிழந்தார். அவருக்கு வயது 46.

இதுபற்றி குயின்ஸ்லாண்ட் காவல் அதிகாரிகள் தகவல் வழங்கியுள்ளனர். சைமண்ட்சின் கார் ஹெர்வி ரேஞ்ச் பகுதிக்கு வந்தபோது, சாலையை விட்டு விலகி விபத்தில் சிக்கியது என்றும் காரில் அவர் ஒருவர் மட்டுமே பயணம் செய்துள்ளார் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.


அவரைக் காப்பாற்ற துணை மருத்துவர்கள் முயன்றபோதும் அந்த முயற்சி பயனளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. சைமண்ட்சுடைய துணைவியாரான லாராவுக்கும் குடும்பத்தினருக்கும் விபத்துக் குறித்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு, குளோ மற்றும் பில்லி ஆகிய 2 குழந்தைகள் உள்ளனர்.

சைமண்ட்ஸ் ஆஸ்திரேலிய அணிக்காக 198 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 5,088 ஓட்டங்களையும் 133 விக்கெட்டுக்களை எடுத்துள்ளார். 26 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1,462 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார்.

சகலதுறைவீரரான அவர், அதிரடியாகத் துடுப்பெடுத்தாடக்கூடியவர் என்பதோடு, மித வேகம் மற்றும் சுழற்பந்து என தேவைக்கேற்றபடி பந்து வீசும் ஆற்றலையும் கொண்டவர். 2003 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர்களில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணியில் சைமண்ட்ஸ் முக்கிய பங்கினை ஆற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டில் முன்னாள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களான ஷேன் வோர்ன் மற்றும் ரொட்னி மார்ஷ் ஆகியோர் உயிரிழந்த நிலையில், சைமண்ட்சும் விபத்தில் உயிரிழந்துள்ளமை கிரிக்கெட் ரசிகர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சைமண்ட்சின் நெருங்கிய நண்பரான அடம் கில்கிறிஸ்ட், மிகவும் நம்பிக்கையான, கலகலப்பான, அன்பான அதேவேளை எதையும் நமக்காகச் செய்யக் கூடிய நண்பரைப் பற்றிச் சிந்திப்பதாக தனது டுவிட்டர் பதிவில் சைமண்ட்சின் இழப்புப் பற்றி தெரிவித்திருக்கிறார்.

# இந்த வருடத்துக்கான அகில இலங்கை பாடசாலை விளையாட்டு விழா நவம்பரில்



கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக கடந்த இரு ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த அகில இலங்கை பாடசாலை விளையாட்டு விழாவை எதிர்வரும் நவம்பர் 22, 23, 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்வி அமைச்சின் பணிப்பாளர் தயா பண்டார, பிரதிக் கல்விப் பணிப்பாளர் உபாலி அமரதுங்க, உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ருவன் பத்திரன, தில்ருக் ஜயவர்தன மற்றும் பிரபாத் இந்திக்க ஆகியோரது பங்குபற்றலுடன் இம்முறை அகில இலங்கை பாடசாலை விளையாட்டு விழாவை நடத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், இந்த ஆண்டுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் அனைத்தும் வழமை போன்று மாகாண மட்டத்தில் நடைபெறவுள்ளன எனவும்தெரியவருகிறது.

இதனிடையே, இந்த ஆண்டு அகில இலங்கை பாடசாலை விளையாட்டு விழாவின் குழுநிலை மற்றும் எடைப் பிரிவு விளையாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் மூன்று கட்டங்களாக இடம்பெறும் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. முதல் கட்டம் செப்டெம்பர் 17, 18 மற்றும் 19 ஆகிய திகதிகளிலும், இரண்டாவது கட்டம் செப்டம்பர் 23, 24, 25 மற்றும் 26 ஆகிய திகதிகளிலும், மூன்றாவது கட்டம் ஒக்ரோபர் 1, 2, 3 மற்றும் 4 ஆகிய திகதிகளிலும் நடைபெறுமென அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, அகில இலங்கை பாடசாலை விளையாட்டு விழாவிற்கான கல்வி வலய பாடசாலை விளையாட்டுப் போட்டிகளின் முதல் சுற்றுப் போட்டிகள் ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னரும், மாகாண மட்டப் போட்டிகள் செப்டெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தப்படும் என கல்வி அமைச்சின் விளையாட்டு மற்றும் உடற்கல்விப் பிரிவு அறிவித்துள்ளது.

# காணாமல்போனோர் அலுவலக முன்னாள் ஆணையாளரின் குற்றச்சாட்டை முற்றாக மறுக்கிறார் அதன் தவிசாளர் மகேஷ்!

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அதன் ஆணைக்கு அமைவாகச் செயற்படவில்லை என்று அண்மையில் பதவி விலகிய ஆணையாளர் ஷிராஸ் நூர்தீனின் குறற்றச்சாட்டை நான் முற்றாக மறுக்கின்றேன். இதுவரையான காலமும் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோரின் எவ்வித தலையீடுகளுமின்றி எமது அலுவலகம் சுயாதீனமாகச் செயற்பட்டுவருகின்றது என்று காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்தார்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர்களில் ஒருவராகப் பதவிவகித்த ஷிராஸ் நூர்தீன் சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னர் பதவி விலகுகிறேன் அறிவித்திருந்தார்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஆண்டறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் கிளைக்கட்டமைப்பிற்கு அனுப்பப்படவேண்டியிருந்தபோதிலும், அது உரியவாறு அனுப்பப்படவில்லை என்றும், சுயாதீனமான முறையில் செயற்படவேண்டியகாணாமல்போனோர் பற்றியஅலுவலகத்தின்செயற்பாடுகளில் நீதியமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சுக்களின் தலையீடுகள் காணப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டியிருந்த அவர், காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் பாதிக்கப்பட்ட குடும்பங்களின்மீது இரக்கத்துடன் செயற்படவில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

குறிப்பாக 2017 ஆம் ஆண்டு காணாமல்போனோர் பற்றிய அலுவலகச்சட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட ஆணைக்கு அமைவாக அவ்வலுவலகம் இயங்கவில்லைஎன்றும்அவர்குறிப்பிட்டிருந்தார். எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்மையளிக்கக்கூடியவகையிலான முன்னேற்றகரமான நடவடிக்கைகளை முன்னெடுக்காத காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தில் அங்கம்வகிப்பதில் பயனில்லை என்பதாலேயே அதிலிருந்து தான்விலகினேன்எனவும்கூறியிருந்தார்.

முன்னாள் ஆணையாளர் ஷிராஸ் நூர்தீனின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்தவிடம் வினவியபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார் –

நாட்டிலுள்ள நீதிமன்றங்களை சுயாதீனக்கட்டமைப்புக்கள் என்று கூறுகின்றபோதிலும், அவற்றுக்கு அவசியமான நிதி உள்ளிட்ட ஏனைய வளங்கள் அமைச்சின் ஊடாகவே வழங்கப்படுகின்றன.

அதேபோன்று காணாமல்போனோர் பற்றிய அலுவலகமும் நிதி அடிப்படையில் சுயாதீனமாகச் செயற்படக்கூடிய கட்டமைப்பல்ல. எனவே நீதியமைச்சின் ஊடாக எமது அலுவலகத்துக்கு அவசியமான நிதி வழங்கப்படுவதுடன், ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனுசரணையும் வழங்கப்படுகின்றது.

எனினும் நான் இதன் தவிசாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து தற்போதுவரை ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ எமது அலுவலகத்தின் செயற்பாடுகளில் எவ்வித தலையீடுகளையும் மேற்கொண்டதில்லை.

இதுவரையான காலத்தில் நான் அவர்களை நேரில் சந்தித்ததுமில்லை. அதேபோன்று நீதியமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் போன்றோரும் எமக்கு எவ்வித அழுத்தங்களையும் பிரயோகித்ததில்லை. மாறாக காணாமல்போனோர் அலுவலகம் சுயாதீனமாகவும் செயற்திறனுடனும் இயங்குவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்கியிருக்கின்றார்கள். எனவே காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அதன் ஆணைக்கு அமைவாக இயங்கவில்லை என்ற ஷிராஸ் நூர்தீனின் குற்றச்சாட்டை முழுமையாக மறுக்கின்றேன். எமது அலுவலகத்தில் பதவி வகிப்பதற்கு முன்னதாக ஷிராஸ் நூர்தீன் இது போன்றதொரு கட்டமைப்பில் பணியாற்றியிருக்கவில்லை என்பதால், அவர் இதன் நடைமுறைகள் தொடர்பில் அறியாதிருக்கலாம் அல்லது குழப்பமடைந்திருக்கலாம். இல்லாவிட்டால் வேறு ஏதேனும் அழுத்தங்கள் இருந்திருக்கலாம் என்று தெரிவித்தார்.

## 9 ஆம் திகதி வன்முறைச் சம்பவங்கள்; இதுவரை 90 பேர் கைதாகியுள்ளனர்

நாடளாவிய ரீதியில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 90 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

வெள்ளிக்கிழமை வரை 75 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்தேக நபர்கள் நாட்டின் பல பாகங்களில் இருந்து கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் 15 பேர் நீர்கொழும்பிலும், 17 பேர் பொலன்னறுவையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இதே சம்பவம் தொடர்பில் கம்பஹாவைச் சேர்ந்த 09 சந்தேக நபர்களும், அநுராதபுரத்தைச் சேர்ந்த 04 சந்தேக நபர்களும் நேற்று கைது செய்யப்பட்டனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சமூக வலைத்தளங்கள் ஊடாக வன்முறைகளை தூண்டிய குற்றச்சாட்டில் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எரிந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்குக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை

ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டத்துக்கு தமது பூரண ஆதரவை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்திருந்தது.

பின்னர், எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வில் பிரதி சபாநாயகராக அஜித் ராஜபக்ஷவை நியமிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற குழுவிற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

91 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்த நிலையில், எஞ்சியவர்கள் பாதுகாப்பு மற்றும் பிற காரணங்களுக்காக கூட்டத்தில் பங்கேற்க மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் ஆளும் கட்சி எம்.பிக்களின் வீடுகள் மீது அண்மையில் தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் காரசாரமான சூழல் நிலவியதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம், எரிக்கப்பட்ட எம்.பிக்களின் வீடுகளுக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

ஆளும் கட்சி எம்.பிக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய பொலிஸ்மா அதிபர் தவறிவிட்டார் என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி பொலிஸ் மா அதிபரை கூட்டத்துக்கு அழைத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# முள்ளிவாய்க்கால் கஞ்சி தென்மராட்சியில் வழங்கல்





தென்மராட்சி பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியமும் பொதுமக்களும் இணைந்து சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையத்தில் நேற்று (சனிக்கிழமை) முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு இறுதிப் போரில் மக்கள் பட்ட அவலத்தை நினைவுகூர்ந்து மக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிவைத்தனர்.

தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் இணைப்பாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கஞ்சி வழங்கும் நிகழ்வில் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் சிவமங்கை, சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் வாமதேவன் மற்றும் நகரசபை பிரதேசசபை உறுப்பினர்கள், மதத்தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.05.2022இல் வெளியிடப்பெற்றது.